Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
MONDAY, DECEMBER 23 2024

திங்கட்கிழமை 23, டிசெம்பர் 2024 | ஒளி: 10 கதிர் 120 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

# ஹட்டன் – மல்லியப்பில் கோர விபத்து;
# சாரதிக்கு விளக்கமறியல்




எஸ்.கணேசன்

ஹட்டன் - மல்லியப்பு பிரதேசத்தில் சனிக்கிழமை (21) இடம்பெற்ற தனியார் பேருந்து விபத்தில் காயமடைந்து பொலிஸ் பாதுகாப்பில், டிக்கோயா-கிளங்கன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் சாரதியை இம்மாதம் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹட்டன் நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் எஸ்.ராம்மூர்த்தி, ஞாயிற்றுக்கிழமை (22) உத்தரவிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2




**விபத்துக்குப் பின்னர் CCTV பதிவுகள் அழிப்பு**

**சாரதி அலைபேசியில் இருந்ததாக தகவல்**

**காயமடைந்தோருக்கு தொடர்ந்தும் சிகிச்சை**

# திறந்திருக்கும் நேரம் அதிகரிப்பு



கொழும்பு தாமரை கோபுரத்தின் திறப்பு நேரம் கிறிஸ்மஸ் காலம் மற்றும் புத்தாண்டு கொண்டாட்டத்திற்காக நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி தாமரை கோபுரம், டிசெம்பர் 25 மற்றும் 26ஆம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் நள்ளிரவு வரை திறந்திருக்கும்.

அத்துடன், டிசெம்பர் 27ஆம் திகதி காலை 9.00 மணி முதல் இரவு 11.00 மணி வரையிலும், டிசெம்பர் 31 மற்றும் ஜனவரி 01ஆம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் மறுநாள் அதிகாலை 1.00 மணி வரையிலும் திறந்திருக்கும் என்று அதன் நிர்வாகம் தெரிவித்துள்ளது.



# கொழும்பில் நங்கூரமிட்ட 'மஹா சயுரே' மருத்துவமனை

'மஹா சயுரே' மருத்துவமனை என அழைக்கப்படும் சீனாவின் 'பீஸ் ஆர்க்' இராணுவ மருத்துவமனை கப்பல் தற்போது கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ளது.


மேலும், 'பீஸ் ஆர்க்' என்ற கப்பல், கடற்படையின் இசைக்குழு வரவேற்புக்கு மத்தியில் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டதும் சிறப்பு. உலகின் அதிநவீன தொழில்நுட்பம் கொண்ட இராணுவ மருத்துவமனைக் கப்பலாக இதைக் கருதலாம்.

தொடர்ச்சி P2

# “நோன்பு காலத்தில் சா/த பரீட்சை நடத்துவது அசௌகரியமானது”

நூருல் ஹுதா உமர்

எதிர்வரும் 2025ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடுப் பகுதியில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை நடத்துவதற்கு பரீட்சை திணைக்களம் தீர்மானித்திருக்கும் இவ்வேளையில், அந்த காலமானது முஸ்லிம்களின் புனித நோன்பு காலமாக அமைந்துள்ளது. அதனால் இப்பரீட்சையை நோன்பு ஆரம்பிக்க முன்னர் அல்லது நோன்பு பெருநாள் முடிந்த பின்னர் நடத்த அரசாங்கம் முன்வர வேண்டும் என அல்-மீஸான் பௌண்டஷன், ஜனாதிபதி, கல்வி அமைச்சரான பிரதமர், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், பரீட்சை திணைக்களம் ஆகியவற்றுக்குக் கோரிக்கையொன்றை முன்வைத்து உள்ளது.



தொடர்ச்சி P2



# “ஆபிரிக்க நத்தைகளால் பேராபத்து”

புகழிந்தன்

ஆபிரிக்காவை தாயகமாகக் கொண்ட பெரும் நத்தைகள், சமீபத்தில் பெய்த பெரு மழையின் பின்னர் பல பகுதிகளில் படையெடுக்க ஆரம்பித்துள்ளன. ஆபிரிக்கப் பெரும் நத்தைகள் ஏற்கெனவே இங்கு அவதானிக்கப்பட்ட போதும், இப்போது இவற்றின் பெருக்கம் அதிகமாக உள்ளது. பயிர் பச்சைகளையெல்லாம் தின்று தீர்க்கும் இவை, உள்ளூர் உயிரினங்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பதோடு, நோய்களைப் பரப்பும் கருவிகளாகவும் செயல்படுகின்றன. இவற்றை இப்போதே கட்டுப்படுத்த தவறினால் விரைவில் பேராபத்துகளை விளைவிப்பவையாக அமையும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.



தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (22) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே ஐங்கரநேசன் இவ்வாறு எச்சரித்துள்ளார். தொடர்ந்து அவர் தெரிவிக்கையில், ஆபிரிக்கப் பெரும் நத்தைகள் (*African Giant Snail- Lissachtina fulica*) பிரித்தானியர் ஒருவரால் பின் விபரீதங்கள் புரியாமல் இலங்கைக்குள் எடுத்துவரப்பட்ட ஓர் அந்நிய இனம்.

தொடர்ச்சி P2

புலிகளின் தங்கத்தை தேடிய

# ஐவர் கைது

கிளிநொச்சி-கனகபுரத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் புலனாய்வுத் தளமாக விளங்கிய காணி ஒன்றில், புதையல் மற்றும் தங்கம் தோண்டிய பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட ஐவர் சனிக்கிழமை (21) கைது செய்யப்பட்டதாக கிளிநொச்சி பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

அரவியநகர் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக அதிரடிப் படையினர் குறிப்பிட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

# வவுனியாவில் அதிக பனி மூட்டம்

க.அகரன்

வவுனியாவில் அண்மைய நாட்களை விடவும், ஞாயிற்றுக்கிழமை (22) அதிக பனி மூட்டமாகக் காணப்படுகின்றது. கடும் பனி மூட்டம் காரணமாகப் போக்குவரத்தை மேற்கொள்வதில் வாகன சாரதிகள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். குறிப்பாக ஏ-9 வீதி மற்றும் மன்னார் வீதிகளில் பயணிக்கும் வாகனங்கள் ஒளியைப் பாய்ச்சியபடி சென்றமை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.



# 22,967 வீதி விபத்துகளில் 2,141 பேர் உயிரிழப்பு

2024ஆம் ஆண்டு இதுவரையான காலப்பகுதியில், இடம்பெற்ற வீதி விபத்துகளில் மொத்தம் 2,243 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2024 ஜனவரி 1 முதல் டிசெம்பர் 13, வரை 22,967 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.
அதில், 2,141 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளது. இந்த காலப்பகுதியில் 6,500 பாரிய விபத்துகளும் 9,127 சிறிய விபத்துகளும் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளில் கடந்த 24 மணித்தியாலங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் குறைந்தது 13 பேர் உயிரிழந்துள்ளனர். ஹட்டன், மாரவில, ஹம்பலாந்தோட்டை, கம்பளை, ஹெட்டிபொல, மட்டக்களப்பு, மிரிஹான, கெபித்திகொல்லேவ மற்றும் சீதுவ ஆகிய இடங்களில் சனிக்கிழமை (21) இந்த விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

தொடர்ச்சி P2

# பிரதமருடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் சந்திப்பு



பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கை வதிவிட தூதுக் குழுவின் இலங்கைக்கான பணிப்பாளர் *Takafumi Kadono* ஞாயிற்றுக்கிழமை(22) அன்று பிரதமர் அலுவலகத்தில் சந்தித்துள்ளார்.

இந்த கலந்துரையாடலின் போது, இலங்கையின் அபிவிருத்திச் செயன்முறையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் முக்கிய பங்கு குறித்து மீண்டும் வலியுறுத்தப்பட்டதுடன், இலங்கையின் தேசிய அபிவிருத்தி முன்னுரிமையாக புதிய கல்வி சீர்திருத்தங்கள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், புதிய கல்விச் சீர்திருத்தங்கள் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்கு பாடசாலைக் கட்டமைப்பு, அதிபர் ஆசிரியர் பயிற்சி மற்றும் மதிப்பீட்டு பொறிமுறைகளை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தைப் பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், அதிபர், ஆசிரியர் பயிற்சியை மேம்படுத்துதல் உட்பட, முன்னெடுக்கப்பட்டுவரும் திட்டங்களின் மூலம் கல்வித் துறையில் உள்ள சவால்களைத் தீர்ப்பதில் தங்கள் பங்களிப்பு குறித்தும் இதன்போது ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகள் கலந்துரையாடியுள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

வைத்தியசாலைக்குச் சென்ற பதில் நீதவான், சந்தேக நபரான சாரதியின் நிலைமை தொடர்பில் வைத்தியர்களிடம் கேட்டறிந்து, கொண்டதன் பின்னரே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஹட்டன்- மல்லியப்பு பகுதியில் விபத்துக்குள்ளான பேருந்தில் பொருத்தப்பட்டிருந்த CCTV பதிவுகள் அழிக்கப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர், தரவுக்கட்டமைப்பை மொரட்டுவை பல்கலைக்கழகத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், அந்த பேருந்து விபத்துக்குள்ளான சந்தர்ப்பத்தில் அந்த பேருந்தின் சாரதி அலைபேசியைப் பயன்படுத்தியவாறு பேருந்தைச் செலுத்தியுள்ளமை விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.அந்த பேருந்தின் நடத்துநரின் அலைபேசியையே சாரதி பயன்படுத்தியுள்ளமை விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

ஹட்டனில் இருந்து கண்டி நோக்கி சனிக்கிழமை (21) காலை பயணித்த தனியார் பேருந்து, மல்லியப்பு பகுதியில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

அதில் பயணம் செய்தவர்களில், மூவர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த மூவரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில், கண்டி புறநகர் பகுதியைச் சேர்ந்த அப்துல் உவைஸ் (வயது 68), ஹட்டன் தோட்டப் பகுதியைச் சேர்ந்த தேவராஜ் தினேஷ்குமார் (வயது 14), நோர்வூட் மேற்பிரிவைச் சேர்ந்த முத்துராக்கு (வயது 67) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

பேருந்தில் பயணித்த 53 பேர் காயமடைந்து டிக்கோயா-கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களிலேயே மூவர் உயிரிழந்துள்ளனர்.

படுகாயமடைந்த ஏழு பேர், கண்டி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். ஏனையோர், டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என டிக்கோயா ஆதார வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த பேருந்தின் சாரதி, நடத்துநர் ஹட்டன் பொலிஸாரின் பாதுகாப்பில், டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என ஹட்டன் பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், விபத்துக்குள்ளான பேருந்தில் அனுமதிக்கப்பட்ட ஆசனங்களை விட சில ஆசனங்கள் மேலதிகமாக பொருத்தப்பட்டிருந்ததாக ஹட்டன் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். விபத்துக்குள்ளான பேருந்து சனிக்கிழமை (21) இரவு மீட்கப்பட்டுள்ளது.

விபத்தில் உயிரிழந்த 14 வயதுடைய சிறுவன் சிறுநீரக நோயாளர் என்பதுடன், மாதாந்த சிகிச்சை பெறுவதற்காகத் தனது சகோதரியுடன் கண்டிக்கு சென்றுகொண்டிருந்த போதே இவ்விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்த சிறுவனின் சகோதரியும் காயமடைந்து டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த விபத்து தொடர்பில், ஹட்டனுக்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் வீரசேகரவின் மேற்பார்வையில் ஹட்டன் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்சித் ஜயசேன தலைமையில் ஹட்டன் வாகன பிரிவு அதிகாரிகள் விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் பிரேதப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என ஹட்டன் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

வீதி விபத்துக்களை குறைக்கும் நோக்கில், தனியார் பேருந்து சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கான செயலமர்வை, ஹட்டன் பொலிஸ் போக்குவரத்து திணைக்கள அதிகாரிகள் மற்றும் மத்திய மாகாண வீதி போக்குவரத்து அதிகார சபை அதிகாரிகள் இணைந்து ஹட்டனில் அண்மையில் நடத்தினர்.

# ஐவர் கைது

புதையல்களைக் கண்டறிவதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஸ்கேனர் ஒன்றும் சந்தேகநபர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேகத்திற்குரிய பொலிஸ் கான்ஸ்டபிள் தகவல் தொழில்நுட்பப் பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர் எனவும் அவர் இந்த புதையல் வேட்டை நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கியவர் எனவும் தெரியவந்துள்ளது.

கடந்த யுத்தத்தின் போது புலிகள் அமைப்பினர் இந்த இடத்தை புலனாய்வு தளமாகப் பயன்படுத்தியதாகவும் பழங்கால பெறுமதிகளைக் கொண்ட சில கற்கள் இருந்ததாகவும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

# கொழும்பில் நங்கூரமிட்ட ‘மஹா சயுரே’ மருத்துவமனை

கிழக்கு சீனாவின் Zhejiang மாகாணத்தில் Zhoushan இல் அமைந்துள்ள இராணுவ துறைமுகத்தில் இருந்து ஜூன் 16 அன்று கப்பல் தனது பயணத்தைத் தொடங்கியது.

உலகெங்கிலும் உள்ள அவசரகால சூழ்நிலைகளுக்கு உடனடி மனிதாபிமான நிவாரணம் வழங்குவதே இந்த கப்பலின் முக்கிய பணியாகும். இந்த கப்பல் சீன மக்கள் குடியரசால் வடிவமைக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டது. இந்த கப்பல் 2008 முதல் மருத்துவ உதவி வழங்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது.

178 மீட்டர் நீளமும் 24 மீட்டர் அகலமும் கொண்ட இந்த கப்பலில் 386 பணியாளர்கள் உள்ளனர். அவர்களில் 106 பேர் மருத்துவர்கள். கப்பலில் சிறிய படகுகள் மற்றும் ஹெலிகாப்டர்களும் பொருத்தப்பட்டுள்ளன. கப்பலில் 17 மருத்துவத் துறைகள் மற்றும் 5 துணை நோயறிதல் துறைகள் உள்ளன.

கொழும்பு துறைமுகத்தில் ஒருவாரம் தங்கியிருக்கும் கப்பல் சிங்கப்பூர் வழியாக சீனா திரும்பும். கப்பல் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள ஒரு வாரத்தில் இலங்கை மக்களுக்கும், சீன நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் உள்ளிட்ட சீன பிரஜைகளுக்கும் இலவச நோயறிதல் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# “நோன்பு காலத்தில் சா/த பரீட்சை நடத்துவது அசௌகரியமானது”

இது தொடர்பில் அல்- மீஸான் பௌண்டஷனின் விடுத்துள்ள கோரிக்கை கடிதத்தில் கூறியுள்ளதாவது, உலகில் வாழும் இஸ்லாமியர்களின் புனிதமிகு மாதங்களில் ஒன்றான புனித ரமழான் என்பது அமல்கள் நிறைந்த மாதமாகும். இந்த மாதத்தில் 13 மணித்தியாலங்களுக்கு மேலாகப் பகல் நேரங்களில் முஸ்லிம்கள் நோன்பு நோற்றிருப்பதுடன் பகலிலும், இரவிலும் இறைவனை அதிகம் அதிகம் தொழும் மாதமாகும். அருட்கொடைகள் நிறைந்த இந்த மாதத்தில் முஸ்லிம்கள் நிறைய நன்மையான காரியங்களைச் செய்வதுடன் இரவு நேரத்திலும் நீண்ட நேரம் நின்று தொழும் காலமாகும். இந்த காலத்தில் பள்ளிவாசல்கள் சகலதிலும் மார்க்க சொற்பொழிவுகளும், வணக்க வழிபாடுகளிலும் மக்கள் ஈடுபடுவார்கள்.

இப்படியான சங்கை மிகுந்த காலத்தில் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையை நடத்தப் பரீட்சை திணைக்களம் தீர்மானித்திருப்பது பொருத்தமற்ற செயலாக அமைந்துள்ளது என்ற விடயம் இப்போது முஸ்லிம்கள் மத்தியில் பேசுபொருளாக மாறியிருக்கிறது. பரீட்சை எழுதும் முஸ்லிம் மாணவர்களும், பரீட்சை கடமைக்குச் செல்லும் முஸ்லிம் உத்தியோகத்தர்களும் நோன்பு காலங்களில் பரீட்சையை எதிர்கொள்வதும் பரீட்சைக்குத் தயாராவதும் உடலியல் ரீதியாக மட்டுமல்லாமல் உளவியல் ரீதியாகவும், மார்க்க கடமைகளிலும் தாக்கம் செலுத்த வாய்ப்புள்ளது.

இதனால் இலங்கையின் தேசிய இனங்களில் ஒன்றான முஸ்லிம்களின் உணர்வுகளை மதித்து இலங்கை முஸ்லிம்களின் மார்க்க கடமைகளையும், கல்வி நடவடிக்கைகளையும் திருப்த்திகாரமாக முன்னெடுக்க இந்த பரீட்சை நேரசூசியில் மாற்றத்தை ஏற்படுத்த அரசாங்கமும், குறித்த துறைக்குப் பொறுப்பான திணைக்களங்களும் முன்வரவேண்டும் என்பதுடன் முஸ்லிம் கட்சிகள், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தில் கரிசனை செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# “ஆபிரிக்க நத்தைகளால் பேராபத்து”

ஒரு நத்தையிலேயே ஆண், பெண் இனப்பெருக்க உறுப்புகள் இரண்டும் இருப்பதால் இரண்டு நத்தைகள் சோடி சேரும் போது இரண்டுமே முட்டைகளை உருவாக்குகின்றன.

சராசரியாக 5 தொடங்கி 6 ஆண்டுகள் வரை வாழ்கின்ற ஒரு நத்தை தன் ஆயுளில் 1,000க்கும் அதிகமான முட்டைகளை இடுகின்றன. அந்நிய இனமான இவற்றை இரையாக்க இலங்கையின் இயற்கைச் சூழலில் இரை கௌவிகள் எதுவும் இல்லை. இதனால் பல்கிப்பெருகி இப்போது ஓர் ஆக்கிரமிப்பு இனமாக உருவெடுத்துள்ளது.

உலகின் உயிர்ப்பல்வகைமையின் அழிவுக்கு அந்நிய ஊடுருவல் இனங்களும் ஒரு பெரும் காரணமாக உள்ளது. பகலில் மறைந்திருந்துவிட்டு இரவில் இரை தேடும் ஆபிரிக்க நத்தைகள் பயிர்கள், அலங்காரச் செடிகள், புல் பூண்டுகள் என்று எல்லாவற்றையும் தின்று தீர்த்து வருகின்றன. ஒரு தாவரத்தில் உள்ள நோய்க்கிருமிகளை இன்னொரு தாவரத்துக்கு காவிச் செல்கின்றன.

இவற்றோடு மனிதர்களில் மூளை மென்சவ்வு ஒவ்வாமையை ஏற்படுத்தும் ஒட்டுண்ணி புழுக்களை இவை காவித் திரிவதும் அறியப்பட்டுள்ளது. ஆபிரிக்க நத்தைகள் பயிர்ச்செய்கைக்கு, உயிர்ப்பல்வகைமைக்கும் அச்சுறுத்தலாக இருப்பதால் இலங்கை அரசாங்கம் இதை அந்நிய ஊடுருவல் இனமாக அறிவித்துள்ளது.

ஆபிரிக்க நத்தைகளைக் கட்டுப்படுத்துவதற்குத் திணைக்களங்களுக்காகக் காத்திராமல் பொது அமைப்புகளும், பொதுமக்களும் முன்வரவேண்டும். உப்பு நீர் கரைசல் உள்ள பாத்திரம் ஒன்றில் இவற்றை அமுத்துவதன் மூலம் சுலபமாக அழிக்க முடியும்.

ஆபிரிக்க நத்தைகள் நோய்க்காவிகளாகவும் இருப்பதால் வெறும் கைகளால் நேரடியாகத் தொடாமல் இலைகள், கடதாசிகள் போன்றவற்றால் இவற்றைப் பிடிப்பதே பாதுகாப்பானது.

இதனை ஒரு சமூகக்கடமையாகக்கருதி நாம் விரைந்து செயல்படவில்லை எனில் ஏற்கெனவே பாரிய பொருளாதார சீரழிவுக்கு, சுற்றுச்சூழல் சீர்கேட்டுக்கு ஆளாகியிருக்கும் இலங்கை இந்நத்தையாலும் பெரும் சீரழிவுகளைச் சந்திக்க நேரும் என்றும் தெரிவித்துள்ளார்.

# பிரதமருடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் சந்திப்பு

இந்நிகழ்வில், இலங்கை பிரதிநிதிகள் குழுவில் பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவே, பிரதமரின் மேலதிக செயலாளர் சாகரிகா போகஹவத்த, ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் சமந்த பண்டார, ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவின் பதில் பணிப்பாளர் ரஞ்சித் கருசிங்க, நிதி அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் தனஞ்சி அமரசிங்க மற்றும் வெளிநாட்டு அமைச்சின் பொருளாதார விவகார பணிப்பாளர் லஷிங்கா தம்முல்லகே ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# 22,967 வீதி விபத்துகளில் 2,141 பேர் உயிரிழப்பு

ஹட்டன் மல்லியப்பு பகுதியில் பேருந்து ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 46 பேர் காயமடைந்துள்ளனர்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பத்தேகம மற்றும் பின்னதுவைக்கு இடையில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன், வேனும் லொறியும் மோதி விபத்துக்குள்ளானதில் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

குறிப்பாக பண்டிகைக் காலங்களில் விபத்துகளைக் குறைக்கத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொது மக்களை பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர்.

# 172ஆவது ஜயந்தி விழா

வி.ரி.சகாதேவராஜா

தூய அன்னை சாரதா தேவியாரின் 172ஆவது ஜயந்தி விழா இராமகிருஷ்ண மிஷனின் மட்டக்களப்பு ஆச்சிரமத்தில் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் முன்னிலையில் ஞாயிற்றுக்கிழமை (22)காலை நடைபெற்றது.


















# எலிக்காய்ச்சலை தடுக்க நடவடிக்கை

எம்.எஸ்.எம்.ஹனீபா

சம்மாந்துறை பிரதேசத்தில் எலிக்காய்ச்சல் பரவும் அபாயத்தை தடுப்பதற்காக பொது மக்களுக்கும், விவசாயிகளுக்கும் விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சம்மாந்துறை சுகாதார வைத்தியதிகாரி எம்.எம்.நௌசாட் ஞாயிற்றுக்கிழமை (22) தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் மற்றும் உப உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு இந்த நோய் அதிகமாகப் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும். அவதானமாகச் செயற்படுமாறும் அவர் கூறியதுடன், எலிக்காய்ச்சல் பரவாமல் தடுப்பது தொடர்பாக விவசாயிகளுக்கும், விவசாய போதனாசிரியர்களுக்கும் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் விழிப்புணர்வூட்டும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.



மேலும், காய்ச்சல், தசைகளில் கடுமையான வலி, கண் விழி சிவப்பு நிறம் அடைதல், சிறுநீர் வெளியேற்றம் குறைவடைதல், சிறுநீருடன் இரத்தம் வெளியேறுதல் இந்த நோயின் அறிகுறிகளாகும்.

அத்துடன், நாய்கள், கால்நடைகள், பூனை, எலி போன்ற பிராணிகளிலும் லெப்டோஸ்பைரா காணப்படுகிறது.

பிராணிகள் பாதிக்கப்பட்டு அவற்றின் சிறு நீர், நீர்நிலைகளினூடாக, கண் மூக்கு சருமத்தினூடாக பக்ரீரியா உள் நுழைகிறது.

ஒரு நபரிடம் இருந்து இன்னொருவருக்கு நேரடியாகப் பரவுவதில்லை.

எனவே, அதிக தொற்றுக்குள்ளாகக் கூடிய வயல் வெளிகளில் பணி புரிவோர் அவதானமாக இருக்க வேண்டும்.

இவ்வாறான அறிகுறிகள் காணப்பட்டால் விவசாயிகள் சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்துடன் அல்லது தமது பொதுச் சுகாதார பரிசோதகர்களுடன் தொடர்பு கொண்டு நோய்த் தடுப்பு தொடர்பான மாத்திரைகள் பெற்றுக் கொள்ளுமாறும், கொதித்தாறிய நீரைப் பருகுமாறும் கூறியுள்ளார்.

# உலக முத்தமிழ் மாநாடு

உலக தமிழ்ச் சங்கம் - சென்னை தமிழ்ச் சங்கம் மற்றும் மலேசியா தமிழ்ச் சங்கம் இணைந்து மலேசியாவில் நடத்திய உலக முத்தமிழ் மாநாட்டில் உலக தமிழ் சாதனையாளர் விருதினை டாக்டர் தியாக.இளங்கோவன், காயத்திரி விக்ரமசிங்க ஆற்றிய தமிழ் மொழி சமூகப் பணிகளுக்காக வழங்கி கௌரவித்தார்.

மாநாட்டில் கலந்து கொண்ட தமிழ்நாடு சிவசேனா மாநில தலைவர் க.சசிகுமார், தமிழ்நாடு முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் டாக்டர் எஸ்.விமலா, வழக்கறிஞர் பிரபு தமிழரசு, இந்தியாவின் கண்டி - யாழ்ப்பாண துணை தூதுவர் ஆ.நடராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த மகாநாடு கோலாலம்பூர், ஈப்போ, கடாரம், பிரைங், சிரம்பான் ஆகிய மாநிலங்களில் நடைபெற்றன. மலேசியா தமிழ்ச் சங்கத்தின் சார்பில் ஆசிரியர் மணி, ஆர்.மாணிக்கம் சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தார்.











# கனரக வாகனத்தில் மோட்டார் சைக்கிள் மோதியதில் இளைஞன் பலி



மட்டக்களப்பு , மாமாங்கேஸ்வரர் ஆலய பிரதான வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கனரக வாகனத்தில் மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிள் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்த சம்பவம் சனிக்கிழமை (21) மாலை இடம்பெற்றுள்ளது.

மாமாங்கம் பாடசாலை வீதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கூழாவடி, மாமாங்கேஸ்வரர் ஆலய வீதியில் உள்ள ஒப்பந்தக்காரரர் ஒருவர் அவரது கனரக வாகனங்களை வீதியில் நிறுத்திவைத்திருந்துள்ளதுடன் பெய்து கொண்டிருந்த மழை காரணமாகக் குறித்த பகுதி இருளாகக் காணப்பட்டுள்ளது.

அந்த வீதியூடாக மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற இளைஞன் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கனரக வாகனத்தில் மோதி விபத்துக்குள்ளானார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் குறித்த வீதியில் வாகனங்கள் நிறுத்தப்படுவது தொடர்பில் கடந்த காலங்களில் பல்வேறு தரப்பினரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும், எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

தேசிய பாடலாக்கப் போட்டியில்

# சுதர்சன் முதலிடம்

வி.ரி.சகாதேவராஜா




தேசிய பாடலாக்கப் போட்டியில் அம்பாறை மாவட்டத்தின் வீரமுனையை சேர்ந்த அருளானந்தம் சுதர்சன் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் உளவள ஆலோசனை உத்தியோகத்தராக கடமையாற்றி வரும் அருளானந்தம் சுதர்சன் ஏலவே பல விருதுகளைப் பெற்றவராவர்.

அண்மையில் அலரி மாளிகையில் இடம்பெற்ற தேசிய இலக்கிய விருது விழாவில் அவர் திறந்த பிரிவு பாடலாக்கத்தில் அகில இலங்கை ரீதியில் முதலாமிடம் பெற்று, விருது, சான்றிதழ் மற்றும் காசோலையைப் பெற்றுக்கொண்டார்.

இவர் ஏலவே சம்மாந்துறை பிரதேச செயலகம் மற்றும் அம்பாறை மாவட்ட செயலகம் மட்டத்தில் நடைபெற்ற போட்டியில் முதலிடம் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியிருந்தார்.

தேசிய மட்டத்தில் 25 படைப்புகளில் அருளானந்தம் சுதர்சனது ஆக்கம் முதலிடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# துவிச்சக்கர வண்டிகளை திருடியவர் சிக்கினார்



நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம் - வடமராட்சி பிரதேசத்தில் துவிச்சக்கர வண்டிகள் திருட்டில் ஈடுபட்ட ஒருவர் சனிக்கிழமை (21) அன்று காங்கேசன்துறை மாவட்ட பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி மு.உதயானந் தலைமையிலான குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கரணவாய் பகுதியைச் சேர்ந்த 23 வயதானவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், சந்தேக நபரிடம் நடத்தப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது, பல்வேறு பகுதிகளிலும் துவிச்சக்கர வண்டிகளைத் திருடிய சம்பவங்களுடன் குறித்த நபர் தொடர்புபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, சந்தேக நபர் வழங்கிய தகவலுக்கமைய 12 துவிச்சக்கர வண்டிகள் மீட்கப்பட்டுள்ளது. மேலும் கைதான சந்தேக நபரையும் கைப்பற்றப்பட்ட துவிச்சக்கர வண்டிகளையும் நெல்லியடி பொலிஸார் ஊடாக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் மரணம்

கிரிந்திவெல, வல்கம்முல்ல பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்த சம்பவம் சனிக்கிழமை (21) மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிரிந்திவெல, திம்பிரிகம பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய ஒருவரே இவ்வாறு தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் குத்தகை அடிப்படையில் காணியொன்றைக் கொள்வனவு செய்திருந்த நிலையில் இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் சந்தேக நபர் கொலையைச் செய்து விட்டு உயிரிழந்தவரின் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த காணியில் வசித்த காவலாளி ஒருவரே இந்த கொலையைச் செய்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் நீதவான் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கி வைப்பு

யது பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில் பிறப்பு அத்தாட்சி பத்திரங்களின்றி அடையாளம் காணப்பட்ட 356 பேரில் 245 பேருக்குப் பிறப்புச் சான்றிதழ்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை பச்சிலைப்பள்ளி பூநகரி ஆகிய நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 356 பேர் பிறப்புச் சான்றிதழ்கள் இன்றி அடையாளம் காணப்பட்டனர்

இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களின் அடிப்படை ஆவணங்களைத் திரட்டி, அவர்களுக்கான பிறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரை 245 பேருக்கான பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், 112 பேருக்கான பிறப்புச் சான்றிதழ்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

குறிப்பாக, பிறப்புக்கள் நிகழ்ந்த போது பதிவுகள் மேற்கொள்ளப்படாமை மற்றும் கடந்த கால யுத்தம் காரணமாகப் பதிவுகள் மேற்கொள்ளப்படாமை தமிழகத்தில் தஞ்சமடைந்தவர்களின் பிள்ளைகள் என பல்வேறு காரணங்களால் குறித்த பிறப்புச் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளப்படாமை என்ற காரணத்தினால் இவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நகரசபைக்கு 3 கோடிக்கும் மேல் வருமானம்

ஆர்.லெம்பேட்

மன்னார் நகர சபையின் ஊடாக பண்டிகைக் கால வியாபார நிலையங்கள் பகிரங்க குத்தகைக்கு விடப்பட்ட நிலையில் அதன் ஊடாக மன்னார் நகரசபைக்கு 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளதாக மன்னார் நகர சபை அறிவித்துள்ளது.

மன்னார் நகரசபையின் பண்டிகை கால வியாபார நிலையங்களை ஏல விற்பனை மூலமாக 10 நாட்களுக்கு குத்தகைக்கு விடும் செயல்பாடு வெள்ளிக்கிழமை (20) மன்னார் நகர சபை செயலாளர் தலைமையில் இடம் பெற்ற நிலையில் 300 கடைகள் ஏல விற்பனை மூலம் வழங்கப்பட்ட நிலையில் மன்னார் நகரசபைக்கு 3 கோடியே இருபது லட்சம் ரூபாய் வருமானம் பெறப்பட்டதுடன் மேலதிகமாக 16 கடைகளுக்கான ஏல விற்பனை இடம்பெற்றது.

கடந்த வருடம் பண்டிகை கால வியாபார நடவடிக்கைகளின் போது 320 கடைகள் பகிரங்க ஏல விற்பனை ஊடாக 2 கோடியே 21 லட்சத்துக்கு வழங்கப்பட்ட நிலையில் இம்முறை 1 கோடி ரூபாய் மேலதிக வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வருமானத்தின் அடிப்படையில் 2025ஆம் ஆண்டுக்கான மன்னார் நகர சபையின் வரவு-செலவுத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளதுடன், மக்கள் பங்களிப்புடன் வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்தி திட்டங்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# முடிச்சு மாறிகள் குறித்து அவதானமாக இருப்பது அவசியம்

பண்டிகை காலம் என்பதால், சகலரும் அவதானமாக இருக்க வேண்டும். தங்களிடம் இருக்கிறதோ, இல்லையோ, எனினும், பண்டிகையைக் கொண்டாடுவதில் சகலரும் ஆர்வமாக இருப்பர். சிலர், கடன்களை பெற்றாவது, தங்களுடைய பிள்ளைகளுக்குப் புத்தாடைகள் வாங்கிக் கொடுப்பர். வீடுகளையும் சுத்தம் செய்து கொள்வர். இவ்வாறு கஷ்டப்படுவோரும் இருக்கின்றனர். மிக இலாவகமாக ஏமாற்றும் பேர்வழிகளும் இருக்கத்தான் செய்கின்றனர்.

கண் விழித்திருக்கும் போதே பலரும் தங்களுடைய கைவரிசையை மிகக் கச்சிதமாக அரங்கேற்றிவிட்டு, அடுத்த கைவரிசையை காட்ட சென்று விடுகின்றனர். இழந்தவர்கள், அதை மீளப் பெற்றுக் கொள்வதற்கு பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றனர். பண்டிகை காலத்தை மையமாகக் கொண்டு, கைவரிசையை கன கச்சிதமாக முடித்துக் கொள்வோரும் உள்ளனர்.

கைவரிசை காண்பதில் மட்டுமன்றி, தரம் குறைந்த பொருட்களை விற்பனை செய்வதிலும் கில்லாடிகள் இருக்கத்தான் செய்கின்றனர். எனினும், பொருட்களின் தரத்தைக் கவனிக்காது, குறைந்த விலைக்குப் பின்னால் அலைமோதும் குழுவினரே, முதலைகள் விரித்திருக்கும் வலைக்குள் சிக்கிக் கொள்கின்றனர். இந்த பண்டிகை காலத்தில் நுகர்வோரைக் காப்பாற்ற வேண்டுமானால், நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அதிரடியாகக் களத்தில் இறங்கி நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

அத்தியாவசிய பொருட்களைப் பதுக்கி வைத்து, செயற்கையாகத் தட்டுப்பாட்டை ஏற்படுத்திவிட்டு, விலையை அதிகரித்து விற்பனை செய்வதற்கு முயன்ற வர்த்தகர்கள் பலரும் கையும் மெய்யுமாக சிக்கிக் கொண்டுள்ளனர். ஆகையால், பொருட்களைப் பதுக்கி வைத்துச் சிக்கிக்கொள்ள வேண்டாம். அவ்வாறு சிக்கிக்கொள்ளும் வர்த்தகர்களுக்குக் கடுமையான தண்டனையைச் சட்டத்தின் ஊடாக பெற்றுக்கொடுக்க வேண்டும்.

பண்டிகை காலம் என்பதால், பெரும் நகர்களுக்கு மக்கள் குடும்பத்துடன் படையெடுப்பர், கடுமையாக உழைத்த பணத்தில் கொஞ்சமாகச் சேமித்து, வருட இறுதி கொண்டாட்டத்துக்குப் பயன்படுத்த நினைக்கும் பலரும் அப்பணத்தை இழந்துவிடுவர். ஆகையால், பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவோர் தங்களுடைய பெறுமதியான பொருட்களையும், ஆவணங்களையும், பணத்தையும் கவனமாக வைத்துக்கொள்ளவேண்டும்.

அருகருகே அமர்ந்து பயணிக்கும் பயணிகளிடம் மிகக் கவனமாக இருக்க வேண்டும். களைப்பில் அயர்ந்துவிட்டால், அதனையும் சுருட்டிக்கொண்டு அடுத்த பஸ் நிறுத்துமிடத்திலேயே பாய்ந்து இறங்கொள்வர். ஆகையால், பெறுமதியான பொருட்களை எடுத்து பஸ்களுக்குள் பார்ப்பைத் தவிர்த்துவிடுவது சால சிறந்தது. சில நிறுவனங்கள் வருடாந்த வருமான கொடுப்பனவுகளை வழங்கியிருக்கலாம். அதனையும் சுருட்டிக்கொள்வதற்கு முயலக்கூடும். ஆகையால், சில விடயங்களில் மௌனமே சிறந்ததாக அமையும்.

முடிச்சுமாற்றிகள் தொடர்பில், பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களில், வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் சிறு வர்த்தகர்களும் பயணிகளை அறிவுறுத்துவர். எனினும், ஒவ்வொரு நாளும் ஏதோவொன்றை பயணிகள் இழந்து விடுகின்றனர். கண்களில் விளக்கெண்ணெய்யை ஊற்றி விழித்திருந்தாலும், கண்களுக்குள் விரலை விட்டு ஆட்டி விடுகின்றனர். இதற்கிடையே மிக நாசுக்காகப் பேசி பல இலட்சம் ரூபாயைப் பலரும் கறந்துவிடுகின்றனர். ஆகையால், அவதானமாக இருப்பது சால சிறந்தது.



தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

கத்திப் பேசியயே தங்களின் தவறான கருத்துகளைச் சரியானது என வாதிடுபவர்கள் பலருளர். அமைதியாகவும் இனிமையாகவும் பேசி தங்களின் கருத்துகளைக் கூற வேண்டும்.

பேசும்போது கூட, மிரட்டும் தொனியில் பேசுவது அநாகரிகமானது. அமைதியான மனிதர்கள் இத்தகையவர்களிடம் நட்புக் கொள்ளமாட்டார்கள்.

பொய்களைப் பேசுபவர்களுக்கு உண்மைகள் எதுவெனப் புரிந்தாலும், அதை ஒப்புக்கொள்ளவும் மாட்டார்கள். கருத்துச் சுதந்திரம் என்பது, கண்டபடி பேசுவதற்கானது அல்ல; சில அரசியல்வாதிகள் எப்படியும் பேசுவார்கள். அத்தகையவர்கள் கேலிக்குரியவர்களாகி விடுவர்.

சிலர் வதந்திகளை கேட்கப் பிரியப்படுவார்கள். அவர்கள், தங்களின் பொய்யான பேச்சுகளுடன் வதந்திகளையும் உள்நுழைத்து விடுவார்கள். நல்ல வார்த்தைகளுக்கு உயிருண்டு. பொய்களைப் புனைபவர் சமூகத்தில் நம்பிக்கை அற்றவர் ஆகின்றார். பொய், துன்பங்களை பிரசவிக்கிறது. பேச்சுகள் மூலம் ஒருவரைக் காயப்படுத்துவது மகாபாவம். நல்ல நெஞ்சில் இருந்து, அழகான சொற்கள் உற்பத்தியாகின்றன.

நன்றி – பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### அணைக்கட்டை அகலப்படுத்தவும்

இவ்வருடம் ஏற்பட்ட பாரிய வெள்ளப்பெருக்கினால் வயல் நிலங்களையும் ஆற்றுக் கட்டுக்களும் பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

நவகிரி குளத்திலிருந்து இரண்டு வான் கதவுகள் நான்கு அடி உயரத்தில் திறக்கப்படும் போது, அதிலிருந்து வெளியேறும் நீரை வெளியேற்றக் கூடிய அளவிற்கு வெல்லாவெளி மண்டூர் பிரதான பாதை ஊடகச் செல்கின்ற அணைக்கட்டுகள் காணப்படுகின்றன. அதில் பிரதானமாக வட்டவளை அணைக்கட்டு ஆகும். இந்த அணைக்கட்டினால் மாத்திரம் வெளியேறும் பாரிய அளவிலான வெள்ள நீர் ஒன்று சேர்ந்து மட்டக்களப்பு வாவியைச் சென்றடைவதற்கு இடவசதி போதாமல் உள்ளது. வயல் நிலங்களையும் பாதித்துக் கொண்டு வெள்ள நீர் செல்வதால் விவசாய செய்கை பெருமளவில் பாதிக்கப்படுகின்றது.

வட்டவளை அணைக்கடை அகலப்படுத்தினால் எதிர்காலத்தில் இந்த அணைக்கட்டு ஊடாகச் செல்லும் வெள்ள நீர் இலகுவான மட்டக்களப்பு வாவியைச் சென்றடையும். அப்போது அப்பகுதியில் பாரிய வெள்ள அனர்த்தங்களோ, விவசாய நிலங்கள் பாதிப்படைவது வெகுவாக குறைவடையும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

எனவே இதனைக் கருத்தில் கொண்டு, விவசாய, நீர்ப்பாசனத், கமநல அபிவிருத்தி திணைக்களங்கள் உள்ளிட்ட துறை சார்ந்தோர் இதனைக் கருத்தில் கொண்டு செயல்பட முன்வர வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

- வ.சக்தி

# இந்திய விஜயத்தில் இல்லாது போன தமிழர் பிரச்சினை

லக்ஸ்மன்

இலங்கை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் இந்திய விஜயம் உலகளவிலும், தேசிய அளவிலும் வெவ்வேறு விதமான முக்கியத்துவத்துடன் பார்க்கப்பட்டிருந்தாலும் தமிழர்களுடைய பார்வை வேறு விதமாகவே இருந்தது. அது தமிழர்களின் இனப்பிரச்சினையை நோக்காகக் கொண்டதாகவே இருந்தது. இருந்தாலும் அந்த விடயம் இந்த விஜயத்தில் கவனிக்கப்படவேயில்லை என்ற குறைபாட்டுக் கருத்துக்களாக இப்போது வெளிவந்து கொண்டிருக்கிறது. பல்வேறு வகையான கேள்விகளையும் உருவாக்கி வருகிறது. இந்தியாவின் தலைவர்களது எந்தவொரு இராஜதந்திர சந்திப்பிலும் தவிர்க்கப்படாத விடயமான தமிழர் பிரச்சினை ஏன் இந்தச் சந்திப்பில் தவிர்க்கப்பட்டது என்பது இப்போதுள்ள சிக்கல்.

இலங்கை அரசு ஒற்றையாட்சி அரசியலமைப்பில் வேரூன்றியிருக்கின்ற நிலையில், இலங்கையின் புதிய அரசாங்கம் அரசியலமைப்பு உருவாக்கமானது அனைத்து மக்களுக்கமானதாக அமையும் என்று கூறிவருகிறது. 13ஆம் திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டாலும் அது ஈழத்தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கையைப் பூரணமாக நிவர்த்திக்கப் போவதில்லை. இது இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டபோதிலிருந்தே வெளியிடப்பட்டு வந்திருக்கிறது. இருப்பினும் 13இலிருந்தேனும் தீர்வுக்கான ஆரம்பப்புள்ளி தொடங்கட்டும் என்றே இப்போதும் தமிழர்கள் கோரிவருகின்றனர்.

ஈழத்தமிழர் அரசியல் என்பது இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது முதல் நீடித்து வரும் ஒரு சிக்கலான மற்றும் பன்முகப்பட்டதாக இருக்கிறது. இந்தப் பிரச்சினை இனம், மொழி, கலாச்சாரம் மற்றும் அரசியல் அதிகாரம் ஆகியவற்றை மையமாகக் கொண்டதாக இருக்கிறது. தமிழ் மொழி மற்றும் கலாசாரத்தை பாதுகாத்து வளர்க்க வேண்டும் என்றும் அமைந்திருக்கிறது. அந்தவகையில், தன்னாட்சி கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஈழத் தமிழர்கள் தங்களுக்கென தனியானதொரு பரப்பாகவே உருவாக்கம் பெற்றிருந்தது. அதிகாரப் பகிர்வானது இலங்கை அரசில் தமிழர்களுக்கு சமமான பிரதிநிதித்துவம் மற்றும் அதிகாரப் பகிர்வு இருக்க வேண்டும் என்ற வகையிலேயே காலங்காலமாக இருந்திருக்கிறது. இப்போதும் இருக்கிறது. மனித உரிமைகள் விடயத்தில், போரின் போது உயிரிழந்தவர்கள், கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்கள், இறுதிப் போர்க்காலத்தில் சரணடைந்தவர்கள், போர்க்காலத்தில் ஏற்பட்ட இடப் பெயர்வுகளினால் ஏற்பட்ட இழப்புகள், போர்க்கால அழிவுகள் சார்ந்த நீதியைக் கோருவதாக அமைகின்றது.

ஈழத் தமிழர்களுடைய அரசியலைப் பாதிக்கின்ற காரணிகளாக, இலங்கை அரசின் கொள்கைகள் ஈழத்தமிழர் பிரச்சினையை கையாள்வதிலிருந்து ஆரம்பிக்கின்றது. பன்னாட்டுச் சமூகத்தின் தலையீடானது இலங்கை அரசாங்கத்தை அனுசரித்துக் கொண்டே நகர்வது மிகப்பெரும் பிரச்சினையாகும். இந்தியாவின் நகர்வு இதில் குழப்ப கரமானதாக இல்லையென்றாலும், சர்வதேச அரசியலின் ஒரு பகுதியாகவே இலங்கை அரசியலைப் பார்ப்பதுடன், தமிழர் பிரச்சினை தனியான ஒன்றாகப் பார்க்கப்படவில்லை. அத்துடன், தமிழ்த் தேசிய அரசியலை மேற்கொள்கின்ற தமிழ்க் கட்சிகளின் அரசியலும் முக்கிய காரணியாகவே இருக்கிறது. இதில் தமிழ்க் கட்சிகளிடமில்லாத ஒற்றுமை ஒரு மிகப்பெரிய பிரச்சினையாகும். அந்தவகையில், இக் கட்சிகள் தமிழ் மக்களுக்கான அரசியல் என்று தற்போது மேற்கொண்டுவரும் அரசியல் கேள்விக்குரியதாக இருக்கிறது. அந்தவகையில், அவற்றின் செயற்பாட்டில் மாற்றம் தேவையாக இருக்கிறது. இதே போலவே இலங்கைக்கு வெளியே புலம்பெயர்ந்துவாழும் தமிழர்களிடம் இல்லாத ஒற்றுமையும் இதில் குழப்பமாகவே காணப்படுகிறது.

அந்த வகையில்தான் ஈழத் தமிழர் அரசியலின் எதிர்காலம் பல சிக்கல்களுக்குள் சிக்கியிருக்கிறது.

இலங்கை அரசின் கொள்கைகள், இந்தியா உட்பட பன்னாட்டுச் சமூகத்தின் தலையீடு, தமிழ்த் தேசியக் கட்சிகளின் செயல்பாடுகள், ஒற்றுமையின்மை போன்றவற்றின் பின்புலத்தைக் கொண்டே நடைபெற்று முடிந்த இந்திய விஜயத்தின் சாதக பாதகங்களை நாம் ஆராயவேண்டும்.

பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுத்ததாக இருக்கின்ற ஒற்றையாட்சி முறையின் கீழ் இருக்கும்வரை மாகாண அரசுகளின் நிகழ்ச்சி நிரல் ஊடாகவோ அன்றேல் மத்தியும் மாகாணமும் ஒத்துப்போகவேண்டிய நிகழ்ச்சி நிரல் ஊடாகவோ எதுவும் சாதிக்கப்படப்போவதில்லை.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் தமிழ் மக்களின் அரசியல் தமிழ்த் தேசியத்தினை மறந்துவிட்டனர் என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

இலங்கை அரசாங்கத்தின் ஜனாதிபதிகளும் சிங்களக் கட்சிகளும் அதன் தலைவர்களும் தமிழர்களுக்கென தனியானதொரு பிரச்சினை இல்லை என்பதனை நிரூபிப்பதற்காகவே தொடர்ச்சியாகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட வகையிலும் முயற்சிகளை மேற்கொண்டு வந்திருந்தனர். இது இந்த ஆட்சியிலும் மாற்றம் பெறப் போவதில்லை. இது இந்திய விஜயத்தின் போது, நிரூபிக்கப்பட்டமையையே நாட்டில் புரையோடிப்போன தமிழர்களுடைய இனப் பிரச்சினை பேசப்படாமைக்கு முதல் காரணமாகும். அதே நேரத்தில், இலங்கை அரசியல் யாப்புத் தொடர்பான கள யதார்த்தமும் அதுவே.

> **இனப் பிரச்சினையை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி, இலங்கையை இந்தியா ஒரு கைப் பிடிக்குள் வைத்துக்கொள்ள முயற்சித்திருந்தது**

இந்தியா உள்ளிட்ட சர்வதேசத் தரப்புகளிடம் உச்சபட்சக் கோரிக்கையாகத் தமிழர்கள் 13ஆம் திருத்தத்தையே முன்வைக்கின்றனர். ஆனால், 13ஆம் திருத்தத்தை உடனடித் தீர்வாக இந்தியாவிடம் கோருவது கொள்கை சார் அரசியலுக்கு மட்டுமல்ல இயல்பு அரசியலுக்கும் முரணானது என்பதும் தமிழர்களுக்குத் தெரிந்ததே. இந்த அடிப்படையில் இப்போதைக்கு இவ்விடயத்தினை புதிய அரசாங்கத்திடம் ஆரம்பத்திலேயே எவ்வாறு முன் நகர்த்துவது என்பதில் இந்தியாவுக்கு ஒரு தர்மசங்கடமான நிலையும் காணப்படுகிறது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தேசியப் பாதுகாப்பு என்ற போர்வையில் நாட்டுக்குள் அமுலில் இருக்கிறது. 13ஐ முற்றுமுழுதாக எதிர்ந்த, இலங்கை மீதான இந்தியாவின் அழுத்தங்களை விமர்சித்த இணைந்த வட கிழக்கு மாகாணத்தினை நிரந்தரமாக இணையவிடாது நீதிமன்றம் சென்று பிரித்த ஒரு தரப்பாக இருக்கின்ற மக்கள் விடுதலை முன்னணி, தேசிய மக்கள் சக்தி வடக்கு - கிழக்கு மீதான தம்முடைய பார்வையை வேறுவிதமாகவே கொண்டிருக்கிறது. இது பேரினவாதச் சிந்தனைக்கு மாறுபட்டதாக இருக்க வாய்ப்பேயில்லை என்பதனை தமிழர்கள் புரிந்து கொண்டவர்களே.

இந்தியாவைப் பொறுத்தவரையில், இப்போதைய நிலையில் சீனாவின் கட்டுக்குள் இருந்து இலங்கையை விலக்கிக் கொள்வதாகவே நிலைப்பாடு ஒன்றினை எடுத்திருக்கிறது. அதே நேரத்தில், புதிய கொள்கையுடைய அரசாங்கத்தினை உறவு கொண்டாடுவதும் நடைபெற்றிருக்கிறது. இந்த நிலைப்பாடு தேசிய அளவிலான பூகோள நலன் சார்ந்ததே. இதில் மாற்றமிருக்கப்போவதில்லை. கடந்த காலத்தில் ஈழத் தமிழர்களுடைய இனப் பிரச்சினையை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி, இலங்கையை இந்தியா ஒரு கைப் பிடிக்குள் வைத்துக்கொள்ள முயற்சித்திருந்தது. அன்றைய காலம் இப்போதில்லை. என்பது முதலில் புரிந்து கொள்ளப்படவேண்டும். அதனை அடிப்படையாக வைத்துக்கொண்டே நாம் இந்தியாவின் சர்வதேச அரசியலையும் இலங்கைக்கான அரசியலையும் பார்க்கவேண்டும் என்பது கட்டாயமாகும்.

தமிழ் மக்களின் இணைபிரியா வடக்கு - கிழக்குத் தாயகம் என்ற நிலைப்பாடு காணாமல் போய் நீண்டகாலமாகிவிட்டது. இது ஈழத் தமிழ் போராட்ட இயக்கங்களுக்குள் ஏற்படுத்தப்பட்ட முரண்பாடுகளுடன் சீர்கெட்டுப் போனதாகவே கொள்ளமுடியும். பேரினவாதத்தினால் மேற்கொள்ளப்பட்ட கட்டமைக்கப்பட்ட இன அழிப்பைவிடவும் இது மோசமானதொரு நிலையாகும் என்பதனையும் தமிழர்கள் விளங்கிக் கொள்வது காலத்தின் கட்டாயமாகும்.

ஒரு நாடு, ஓர் அரசு, ஒரு சட்டம் என்றமைகின்ற இலங்கையில் தமிழர்களுடைய சுயநிர்ணயக் கோரிக்கைகள் காணாமல் ஆக்கப்படும் என்பது நிச்சயமாகிவிட்ட நிலையில், தமிழர்களுடைய இனப் பிரச்சினை குறித்த விடயம் இலங்கை - இந்தியத் தலைவர்களுடைய சந்திப்பின் பேசுபொருளாக வேண்டும் என்ற எதிர்பார்ப்பே வீணான விவாதமாகும். பூசி மெழுகலுக்காக ஒவ்வொரு கதைகளும் சொல்லப்பட்டாலும் இதுவே உண்மையும் நிச்சயமுமானதாகும்.

இனக் கலவரங்களையும், இனப் பரம்பல் மாற்றங்களையும் தொடர்ச்சியாக மேற்கொண்டுவந்திருந்த இலங்கையின் அரசாங்கங்கள் தமிழர்களுடைய நியாயமான கோரிக்கைகளை மழுங்கடிக்கும் வகையிலேயே செயற்பட்டிருந்தன. இதில் புதிய அரசு மாற்றமுடையதாக இருக்குமா என்றால் அது காத்திருப்புக்கானது. எது எப்படியிருந்தாலும், இந்தியா இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடாது என்றவகையில் தமிழர்களுடைய விமர்சனங்களும் கருத்துக்கும் ஒன்றையும் சாதிக்கப் போவதில்லை என்பதுவே உறுதியானது.

# கட்டாயம் பேசப்பட வேண்டிய விடயம்



ஏ.எச்.ஏ.ஹுஸைன்

மனித குலத்தில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் அனுபவிக்கும் அவஸ்தையை நின்று, நிதானித்து, உற்றுக் கவனித்து, மதிப்பளித்து, மனித மாண்பைப் பேண வழி தேட வேண்டும் என்ற குரல்கள் இப்பொழுது பட்டி தொட்டி எங்கும் பலமாக, பரவலாக ஒலிக்கத் துவங்கியிருக்கின்றன.











கணக்கெடுப்புக்களின்படி, புள்ளி விபரங்கள் தரும் தகவல்களும் தரவுகளும் நாட்டின் மக்கள் தொகையிலும் உலக சனத் தொகையிலும் வாக்காளர் தொகையிலும் பாதிப்பங்கிற்கு மேற்பட்டோர் பெண்களாகும் என்ற விவரங்கள் உள்ளன.

இவ்வாறு இருந்தபோதிலும், இந்த உலகத்தைப் புதுப்பித்து, மனித குலத்தை உயிர்ப்பூட்டித் தக்க வைக்கும் மாதர்கள், மாதாந்தம் அனுபவிக்கும் இயற்கையான நிகழ்வின் அவஸ்தையை இந்த உலகம் இன்னமும் சீர் தூக்கிப் பார்க்கவில்லை என்ற ஆதங்கம் இப்பொழுது பரவலாக ஒலிக்கிறது.

"மாண்புடன் கூடியதாக மாதவிடாய் செயற்பாட்டை நிலைநிறுத்துவதற்கு பாலியல் உற்பத்தி சுகாதார உரிமைகளே அடிப்படை" எனும் இவ்வாண்டிற்கான தொனிப் பொருளில் அமைந்த நிகழ்வுகள் பரவலாக இடம்பெற்று வருகின்றன.

மாதவிடாய்க்கான மாண்பினை பேசுவோம் என்ற தொனிப் பொருளின் கீழ், பெண்களது சுகாதார மனித உரிமைகளையும் மெனபோஸ் பற்றியும் தெளிவுபடுத்தல்கள் அழுத்தம் கொடுத்துப் பேசப்பட்டு வருகிறது.

சமூக நிறுவனங்களும் தன்னார்வத் தொண்டர் அமைப்புக்களும் மருத்துவ பீட மாணவியர்களும்; இவ்வாறு பல துறையினர் மாதவிடாயின் முக்கியத்துவம் மற்றும் சுகாதார நிலைமைகள் பற்றிய விழிப்புணர்வுகளை வழங்குவதனையும் காணமுடிகின்றது.

மாண்புடன் கூடிய மாதவிடாய்க்கான உலகளாவிய தெற்குக் கூட்டணியும் (Global South Coalition for Dignified Menstruation) இந்த விடயத்தில் இணைந்து கொண்டுள்ளது.

ஐ.நாவினால் சர்வதேச மாண்புடன் கூடிய மாதவிடாய்க்கான நாளாக பிரகடனப்படுத்தப்பட்டு ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 08ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.



இதுவரை காலமும் பேசப்படாது மறைக்கப்பட்டு வந்துள்ள, ஆனால், கட்டாயம் பேசப்பட வேண்டிய இந்த விடயத்தில் மனித குலத்தில் பெண்களும் ஆண்களும் அறிந்து, புரிந்து, தெளிவு பெற வேண்டும் என்ற புரிதல் இப்பொழுது மெல்ல மெல்ல வரத் துவங்கி இருக்கிறது.

அது என்ன பேசப்படாத ஆனால் கட்டாயம் பேசப்பட வேண்டிய விடயம்? அதற்காக சமூகம் என்ன செய்ய வேண்டும்? பாடசாலைகள் என்ன செய்ய வேண்டும் சிவில் சமூக அமைப்புக்களும் ஆர்வலர்களும் செயற்பாட்டாளர்களும் என்ன செய்ய வேண்டும்? அரச அதிகாரிகளதும் அலுவலர்களதும் பங்கு என்ன?

இந்த விடயங்கள் குறித்து விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் நிறுவனம் மேற்கொண்ட விரிவான ஆய்வில் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கைப் பெண்கள் தமது மாதாந்த மாதவிடாய் காலங்களில் உள ரீதியாக அவர்களது குடும்பத்தினாலும் சமூகத்தினாலும் வேலைத்தளங்களிலும் ஏதோவோரு விதத்தில் பெரிதும் பாதிப்புக்குட்படுத்தப்படுகின்றார்கள்.

இதற்கு முதன்மையான காரணமாகப் பிள்ளைகளுக்குப் பாலியற் கல்வி பற்றிய தெளிவூட்டலை வழங்காது சமூகமயமாக்கலிலேயே பெண்ணுக்குரிய மதிப்பினை வழங்கி வளர்க்கும் பொறுப்பைத் தவிர்த்து விடுவது பிரதான காரணமாக அமைகிறது என்று ஆய்வுகளின் அடிப்படையில் தெரியவந்திருக்கிறது.

மாதவிடாய் காலங்களில் பெண்கள் நாளாந்தம் தமது குடும்பப் பொறுப்புக்களையும் கடமைகளையும் செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். காலையில் எழுவது முதல் பெண்கள், சமையல், பிள்ளைகள் பராமரிப்பு, இதர குடும்ப அங்கத்தவர்களைக் கவனிப்பது, என்று பம்பரமாகச் சுழலும் நிலையில் அவளது போஷாக்கான உணவைப் பற்றியோ உடல்நிலை பற்றியோ கவனத்தில் எடுப்பதில்லை.

சில தருணங்களில் அவள் உடல் வலிகளைச் சகித்துக் கொண்டு செயல்பட வேண்டியுள்ளது.

அத்தருணத்தில் அவளது குருதிப் போக்கு அதிகரிக்குமாயின் மயக்க நிலை, பதற்றம் போன்றவற்றுக்கு ஆட்பட்டு உளப் பாதிப்பினையும் உடற்பாதிப்பினையும் ஒருங்கே எதிர்கொள்கின்றாள். இந்தப் பாதிப்புகள் ஆண்கள், ஆண் பிள்ளைகள் எதிர்கொள்ளாதவை.

பாலியல் கல்வியை ஆரம்பக் கல்வி முதலே சொல்லிக் கொடுக்கத் தொடங்குவோமாயின் எல்லோரும், பெண்களதும் பெண் பிள்ளைகளினதும் பெறுமானத்தை உணர்ந்து அவர்களுக்கான மாண்பினைக் கொடுக்கத் தொடங்கி விடுவார்கள்.

பெண்கள் அவர்களது மாதவிடாய்க் காலத்தில் சில தொழில்களில் கூட ஈடுபட முடியாது. குறிப்பாக கடற்றொழில், விவசாயம், வியாபாரம் ஆகியவற்றில் பெண்கள் வேலை இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

அதனால் பெண்களைத் தலைமையாகக் கொண்டு வாழும் பல குடும்பங்கள் மாதாந்தம் தொழிலையும் வருமானத்தையும் நாளாந்த ஜீவனோபாயத்தையும் இழப்பதால் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கிறார்கள்.

அலுவலகங்களில், வர்த்தக நிலையங்களில் மற்றும் தொழில் தளங்களில் பெண்கள் மாதவிடாய் காலங்களில் தொடர்ந்து நின்று கொண்டே பணியாற்றுவதனையும் அக்காலங்களில் கூட, பெண்களது நிலைமைகளைக் கவனத்தில் கொள்ளாது முகாமைத்துவம் இடைவிடாது வேலை வாங்குவதையும் காண முடிகிறது.

இவை மட்டுமல்ல, பெண்கள் தமது மாதவிடாய் காலங்களில் சமய அனுஷ்டானங்களில் ஈடுபட குடும்பமும் சமூகமும் அனுமதிப்பதில்லை. நற்காரியங்களில் ஈடுபடுவதற்கும் சமூகத் தடை உண்டு.

"சமூகக் கட்டமைப்புக்களினால் வடிவமைக்கப்பட்ட கருத்திடல்களைப் பெரிதுபடுத்திக் கொண்டு, இனிமேல் அவற்றை அடியொற்றி நடக்காமல் மூடத்தனங்களை மாற்றியமைக்க வேண்டும். காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் பிற்போக்குவாத கருத்தியல் காரணமாகப் பெண்களின் நலன்கள், மதிப்புக்கள் பேசப்படாது மறைக்கப்பட்டுக் கொண்டு வந்துள்ளன. கட்டாயம் பேசப்பட வேண்டிய பெண்களின் மாண்புறும் மாதவிடாய் எனும் விடயத்தை மறைக்காது துணிவுடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அதற்கான காலம் இப்பொழுது கைகூடி வந்துள்ளது. இதற்கு மாவட்டச் செயலக நிர்வாகத்தின் முழுமையான ஆதரவை நான் வழங்குவேன்." என மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் ஜஸ்டினா ஜுலேகா தெரிவித்தார்.

மட்டக்களப்பில் ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், பொதுச் சுகாதார மருத்துவ மாதுகள், பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பெற்றோர் என நூற்றுக்கு மேல் கூடியிருந்த ஆர்வலர்கள் மத்தியில் பேசும்போது அவர் இதனை வலியுறுத்தினார்.

இந்நிகழ்வு பற்றி தெளிவூட்டிய விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் நிகழ்ச்சித் திட்டத் தலைமை அதிகாரி இந்துமதி,

இள வயதுத் திருமணங்கள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ள தற்போதைய காலகட்டத்தில் இந்த குற்றச் செயல்களுக்கான காரணங்களை ஆராயும்போது, அதற்குப் பின்னணியில் மாதவிடாய் பற்றிய தெளிவு பெண்களிடமும் ஆண்களிடமும் இல்லாதது கண்டறியப்பட்டது. நாம் ஆரம்பித்த சிறுவர் கழகங்களின் ஊடாக பிள்ளைகளின் தாய்மாரும், பெண் பிள்ளைகளும் இந்த விடயங்களை முன்வைக்க ஆரம்பித்தார்கள்.

எனவே, ஆய்வுகளின் அடிப்படையில், இந்த விடயத்திற்குக் கூடுதல் கவனம் எடுக்க வேண்டும் என்பது சிபார்சுகளாக முன்வைக்கப்பட்டது. அதனடிப்படையில், மாண்புறும் மாதவிடாய் எனும் இந்தத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பெண்களது சுகாதார உரிமைகள், அவற்றினை அணுகுவதில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் பாடசாலை மாணவியரின் கல்வியில் இந்த சுகாதார உரிமைகள் அதிகளவில் மறுக்கப்படுவதனையும், அதன் வழி அவர்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகுவதனால் அவர்களது கல்வி உரிமை இழக்கப்படுவதனையும் நாம் இனங்காண முடிந்தது.

குறிப்பாகக் கிராமப்புற பாடசாலைகளில் பொருளாதார ஏற்றத்தாழ்வினால் மாணவியர் மாதவிடாய் சார் பொருட்களைக் கொள்வனவு செய்வதில் பாரிய நெருக்கடியை கொவிட் தொற்றுநோய் காலப்பரப்பிற்குப் பின்னர் எதிர்கொள்ள ஆரம்பித்தனர்.

பொருளாதார நெருக்கடியும் பெரும் சவாலாக அமைந்திருந்தது. வறிய மட்டத்திலுள்ள குடும்பங்களினால் தமது பிள்ளைகளின் மாதவிடாய் காலங்களில் அவர்களுக்கான மாதவிடாய் அணையாடைகள் வாங்கிக் கொடுக்க முடியவில்லை.

சில பாடசாலைகளில் மாதவிடாய் அணையாடை (நாப்கின்கள்) மாற்றுவதற்கோ வாய்ப்புகள் கிடைப்பதில்லை. தொடர்ச்சியாக அவள் அதை அணிந்திருக்கும் போது அங்கு தொற்றுக்கள் ஏற்படலாம். பஸ்தரிப்பு நிலையங்கள், சந்தை போன்ற பொது இடங்களில் பெண்கள் தமது அணையாடைகளை மாற்றுவதற்கோ அவற்றைக் கழிப்பறைகளில் அகற்வதற்கோ பொருத்தமான வசதிகள் கிடையாது.

அதன் விளைவு அடுத்து வரும் தினங்களில் அந்தச் சிறுமி நோய்வாய்ப்பட நேரிடும்போது அவளது தொடர் கற்றல் பாதிக்கப்படுகின்றது.

இவ்வாறு மாதந்தோறும் நிலைமை தொடருமிடத்து அவளது ஆரோக்கியம் பாதிப்புற நேரிடுகின்றது. இது அவளது கல்வி அடைவுகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

நாம் இவ்விடயத்தை அலட்சியம் செய்ய முடியாது. இதற்கு நாம் முக்கியத்துவம் கொடுத்தேயாகவேண்டும்.

நாளைய எதிர்காலத்தை உருவாக்கும் பாரிய பொறுப்பிலிருக்கும் ஒரு பெண்ணின் உடல் ஆரோக்கியம் மிக மிக முக்கியமானது என்பதை நாம் மறுக்கக்கூடாது" என்றார்.

இந்நிகழ்வில் பேசிய வைத்திய கலாநிதி சகாய தர்ஷினி ஜெயக்குமார்,

பெண்களுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் தாங்கள் மாதவிடாய் அவஸ்தையில் இருப்பதை வெளியே கதைக்கப் பயம், அது பற்றி தந்தைக்குச் சகோதரனுக்கு அலுவலகத்தில் உள்ளோருக்கும் தெரியப்படுத்தத் தயக்கம். அப்படியென்றால் பெண்களுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் மாதவிடாய் ஏற்படுவது ஒரு குற்றச் செயலா?

அது அப்படியொன்றும் குற்றச் செயலோ சாபக்கேடோ அல்ல, அதனைத் தெரியப்படுத்தி உங்கள் உறவை மரியாதைக்குரியதாக மதிப்பளிக்கக் கூடியதாக மாற்ற வேண்டும். இந்த விடயம் தொடர்பாக சமூகத்திலுள்ள பாரம்பரிய பிற்போக்கு எண்ணங்களையும் சொற்களையும் செயல்களையும் மாற்றியமைக்க வேண்டும். அப்பொழுதுதான் சமூகத்தில் பெண்களையும் பெண் பிள்ளைகளையும் பற்றி பரஸ்பர நம்பிக்கையையும் மதிப்பும் மரியாதையும் மாண்பும் மலரத் துவங்கும்" என்றார்.

ஓர் பெண் பூப்பெய்திய காலம் முதல் அவள் மாதாந்த மாதவிடாய்ச் சக்கரத்தின் பால் இயற்கையாகவே அவளது உடல் செயற்படத் தொடங்குகின்றது. ஆனால், குடும்பங்களிலும் வேலைத் தலங்களிலும் பெண்களின் மாதவிடாய்க் காலங்களில் அவர்களுக்கான ஒய்வை அல்லது சுகாதாரப் பழக்கங்களைப் பின்பற்றுவதற்கான வாய்ப்புகளை வழங்குவது மிக அரிதாக உள்ளது.

மாதவிடாய் சாதாரணமானதோர் விடயம் - அது பெண்களுக்கு இயற்கையானது என்ற மெத்தனப் போக்கினால் இந்த மதிப்பளிக்கப்படாத தன்மை குடும்பத்தில் இருந்து ஆரம்பிக்கிறது.

அதன் விளைவுதான் பெண் பிள்ளைகளும் பெண்களும் பல தொற்றுகளுக்கு இலக்காவதிலிருந்து இறுதியில் அவர்கள் ஓர் குழந்தைக்குத் தாயாக முற்படும் வரையில் அப்பெண் பல அவஸ்தைகளையும் ஆரோக்கியக் குறைபாடுகளையும் அனுபவிக்க நேரிடுகிறது.

மாதவிடாய் என்பது பெண்களுக்கே உரித்தான மதிக்கப்பட வேண்டிய ஓர் உடல் தொழிற்பாடு என்பதனை குடும்பத்தில் உள்ளவர்கள் எப்பொழுது ஏற்கத் தொடங்குகின்றார்களோ அன்றுதான் மாண்புக்குரிய மாதவிடாய் என்ற எண்ணக்கரு எமது நாட்டிலும் பெருமை பெற ஆரம்பிக்கும்.

சமூகக் கட்டுப்பாடுகள் அல்லது கட்டமைப்புக்களின் விளைவாகப் பெண்கள் மாதவிடாய் காலங்களில் அவர்களது உணவு மற்றும் போஷாக்கு நிலைமைகளில் கவனம் செலுத்தாதது மட்டுமன்றி அக்காலங்களில் அவர்களது உள ஆரோக்கியத்தையும் பேணத் தவறுகிறார்கள் என்று பெண்களது உரிமைகள் சார்ந்து குரல் கொடுப்போரும் சுகாதாரத் துறையினரும் கூறுகின்றனர்.

மனித இருப்பை உறுதிப்படுத்தும் பிள்ளைகளை உருவாக்கும் ஆற்றல் படைத்த பெண்கள் குழாமுக்கு எதைச் செய்தாலும் தமது நன்றிக்கடனைச் செலுத்தி விட முடியாது என ஒவ்வொரு மனிதனும் மனதார எண்ண வேண்டும்.

பெண்கள் ஒரு மனித சமூக அங்கத்தவர் என்ற ரீதியில் பெண்களை சமூகம் அங்கீகரிக்க வேண்டும். அந்த மாற்றம் வீட்டிலிருந்து தொடங்கி தேசம் என்ற வகையில் வியாபிக்க வேண்டும்.

அந்த நாள் என்று உதயமாகின்றதோ அன்றுதான் பெண்கள் தமக்கான மாண்பினை இப்பூமியிலே பெற்றுக்கொண்டவர்களாவர்.

இவ்வேளையில் மாதவிடாய் மாண்பு என்பதனை அனைவரும் புரிந்து கொள்ள வழியேற்படுத்துவோமாயின் சுகாதாரமும் மனித உரிமையும் இதற்கான திறவுகோலாக அமைந்துவிடும்.

இணைந்த குரல்களாக, பழமையில் ஊறிப்போன பிற்போக்குவாதங்களை உடைப்பதன் மூலம் நம் நாட்டிலும் ஆண் பெண் என்ற பாரபட்சமற்ற நிலைமைகளை உருவாக்க முடியும்.

கொங்கோ

ஆற்றில் படகு கவிழ்ந்து

# 38 பேர் பலி; 100 பேர் மாயம்



கொங்கோ நாட்டில், சனிக்கிழமை(21) இரவு, ஆற்றில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், 38 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொங்கோ நாட்டின் இகியுடர் மாகாணத்தில், புரிசா என்ற ஆறு பாய்கிறது. இந்நிலையில், இகியுடர் மாகாணத்தில் இருந்து சனிக்கிழமை (21) இரவு, அண்டை நகருக்கு புரிசா ஆற்றில் படகு ஒன்று புறப்பட்டுள்ளது.


அந்தப் படகில்., 150க்கும் மேற்பட்டோர் பயணித்தனர். கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடப் பலர் தங்கள் சொந்த ஊருக்கு அந்தப் படகில் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

ஆற்றில் பயணித்துக்கொண்டிருந்த போது திடீரென படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் படகில் பயணித்த அனைவரும் ஆற்றில் தத்தளித்தனர்இ தன்போது, ஆற்றில் மூழ்கி38 பேர் உயிரிழந்தனர். மேலும், 100 பேர் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டவர்களை மீட்புக்குழுவினர் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

பிரேசில்

# கோர விபத்தில் 37 பேர் பலி



பிரேசில் நாட்டில் சனிக்கிழமை (21) மாலை இடம்பெற்ற கோர விபத்தில், 37 பேர் உயிரிழந்துள்ளனர்.

பிரேசில் நாட்டின் மினஸ் கரேஸ் மாகாணத்தில் இருந்து, சனிக்கிழமை (21) மாலை, சால் பாலோ நகர் நோக்கி பேருந்து ஒன்று புறப்பட்டுள்ளது.

அந்த பேருந்தில் 37 பயணிகள் பயணித்துள்ளனர்.


தியொபிலோ ஒடானி என்ற பகுதியில் உள்ள நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக பேருந்தின் டயர் வெடித்துள்ளது.

இதனால், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து, எதிரே வந்த லொறி மீது மோதி விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் 37 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், சிலர் படுகாயமடைந்துள்ளனர்.

தகவலறிந்து விரைந்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார், படுகாயமடைந்தவர்களை மீட்டு, அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

புதுடெல்லி

# வனப்பகுதி பரப்பளவு அதிகரிப்பு



இந்தியாவில் வனப்பகுதி பரப்பளவு அதிகரித்துள்ளதாக, ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் 2021 முதல் 2023ஆம் ஆண்டு வரை, வனப்பகுதி மற்றும் மரங்கள் வளரும் பரப்பளவு குறித்து எடுக்கப்பட்ட ஆய்வறிக்கையை மத்திய அரசு வெளியிட்டு உள்ளது.

இதில் மேற்படி காலகட்டத்தில் நாட்டின் வனப்பகுதி மற்றும் மரங்கள் வளரும் பரப்பளவு 1,445 சதுர கிலோ மீற்றர் அளவுக்கு அதிகரித்து இருப்பது தெரியவந்துள்ளது.

அந்தவகையில், கடந்த 2021ஆம் ஆண்டு, 7,13,789 சதுர கிலோ மீற்றராக இருந்த வனப்பகுதியின் பரப்பு 2023இல் 7,15,343 சதுர கிலோ மீற்றராக அதிகரித்து இருக்கிறது.

இதைப்போல, மரங்கள் வளரும் பரப்பளவும் 1,289 சதுர கிலோ மீற்றருக்கு மேல் அதிகரித்து இருக்கிறது. மொத்தமாக வனம் மற்றும் மரங்களின் பரப்பளவு இந்த காலகட்டத்தில் 1,445 சதுர கிலோ மீற்றர் அதிகரித்து மொத்தம் 8,27,357 சதுர கிலோ மீற்றராக உள்ளது.

இது நாட்டின் நிலப்பகுதியில் 25.17 சதவீதம் என இந்திய மத்திய அரசு கூறியுள்ளது.

மேலும், வனப்பகுதி பரப்பளவு அதிகரிப்பின் மூலம் கூடுதலாக 229 கோடி டொன் கார்பனை உறிஞ்சும் திறன் அதிகரித்துள்ளதாக, மத்திய சுற்றுச்சூழல் மந்திரி பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

சபரிமலை

சபரிமலை ஐயப்பன் கோவிலில்

# குறைவான பக்தர்களுக்கே அனுமதி



சபரிமலை ஐயப்பன் கோவிலில் மண்டல பூஜை, எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதையொட்டி, 25ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு ஐயப்ப சுவாமிக்குத் தங்க அங்கி அணிவித்து அலங்கார தீபாராதனை நடைபெறும்.

தற்போது இணைய முன்பதிவு மூலம் தினசரி 70 ஆயிரம் பக்தர்களுக்கும், உடனடி தரிசன முன்பதிவு மூலம் தரிசனத்திற்கு வரும் அனைத்து பக்தர்களுக்கும் அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது.

இதன் காரணமாக, வெள்ளிக்கிழமை (20), ஒரே நாளில் 96 ஆயிரத்து 853 பக்தர்கள் தரிசனம் செய்தனர். இதில் உடனடி தரிசன முன்பதிவு மூலமாக மட்டும் 22 ஆயிரத்து 703 பேர் தரிசனம் செய்துள்ளனர்.

மேலும், 24ஆம் திகதி வரையிலான இணைய முன்பதிவு (70,000) ஏற்கெனவே முடிந்து விட்ட நிலையில், 25, 26ஆம் திகதிகளுக்கான முன்பதிவு நடந்து வருகிறது.

இந்த 2 நாட்களும் பக்தர்களின் கூட்டத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் 25ஆம் திகதி 50 ஆயிரம் பேருக்கும், 26ஆம் திகதி மண்டல பூஜை நாளில் 60 ஆயிரம் பேருக்கும் இணைய முன்பதிவு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர உடனடி தரிசன பதிவு மூலம் 5,000 பக்தர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள் என்று, திருவிதாங்கூர் தேவஸ்தானம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

தமிழகம்

விஜயகாந்தின் நினைவு தினப் பேரணி:

# தி.மு.க., அ.தி.மு.க. கட்சிகளுக்கு அழைப்பு



மறைந்த நடிகரும் தே.மு.தி.க. தலைவருமான விஜயகாந்த்தின் முதலாம் ஆண்டு நினைவு தினப் பேரணிக்கு தி.மு.க., அ.தி.மு.க. உட்பட அனைத்து கட்சிகளையும் அழைக்கவுள்ளோம் என்று தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா தெரிவித்துள்ளார்.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த்தின் முதலாம் ஆண்டு நினைவு தினம் எதிர்வரும் 28ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், தனியார் அமைப்பின் ஏற்பாட்டில், இசை நிகழ்ச்சி ஒன்று, சென்னையில், சனிக்கிழமை (21) நடைபெற்றுள்ளது.

இதில், தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கலந்துகொண்டு, ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.


மேலும், "தமிழகத்தில் கூட்டணி இன்றி தனியாக எந்த கட்சிகளும் ஆட்சியைப் பிடிக்க முடியாது. பா.ஜ.க.-அ.தி.மு.க. கூட்டணிக்கு வர வேண்டுமென டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார். அனைவரும் ஒன்று சேர்ந்தால் அது பலம்தான். ஆனால், இதுகுறித்து அதிமுகதான் முடிவெடுக்க வேண்டும்" என்றார்.

ஸ்பானிய லா லிகாத் தொடர்:

# பார்சிலோனாவை வென்றது அத்லெட்டிகோ மட்ரிட்

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், பார்சிலோனாவின் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (22) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-1 என்ற கோல் கணக்கில் அத்லெட்டிகோ மட்ரிட் வென்றது.

அத்லெட்டிகோ சார்பாக, றொட்றிகோ டீ போல், அலெக்ஸான்டர் சொர்லொத் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, பார்சிலோனா சார்பாகப் பெறப்பட்ட கோலை பெட்ரி பெற்றிருந்தார்.




சிம்பாப்வேக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றிய ஆப்கானிஸ்தான்




சிம்பாப்வேக்கெதிரான ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடரை ஆப்கானிஸ்தான் கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் முடிவேதும் கிடைக்கப் பெறாத நிலையிலும், இரண்டாவது போட்டியை ஆப்கானிஸ்தான் வென்ற நிலையில், ஹராரேயில் சனிக்கிழமை (21) நடைபெற்ற மூன்றாவது போட்டியை வென்றமையைத் தொடர்ந்தே 2-0 என தொடரை ஆப்கானிஸ்தான் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஆப்கானிஸ்தான்

சிம்பாப்வே: 127/10 (30.1 ஓவ.) (துடுப்பாட்டம்: ஷோன் வில்லியம்ஸ் 60 (61) ஓட்டங்கள். பந்துவீச்சு: அல்லாஹ் மொஹமட் கஸன்ஃபார் 5/33, ரஷீட் கான் 3/28, பரீட் அஹ்மட் 1/11, அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய் 1/17)


ஆப்கானிஸ்தான்: 131/2 (26.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: செடிகுல்லாஹ் அடல் 52 (50), அப்துல் மலிக் 29 (66) ஓட்டங்கள். பந்துவீச்சு: ட்ரெவர் குவான்டு 1/27, றிச்சர்ட் நகரவா 1/32)

போட்டியின் நாயகன்: அல்லாஹ் மொஹமட் கஸன்ஃபார்

தொடரின் நாயகன்: செடிகுல்லாஹ் அடல்

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# வில்லாவிடம் தோற்ற சிற்றி




இங்கிலாந்துக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், அஸ்டன் வில்லாவின் மைதானத்தில் சனிக்கிழமை (21) நடைப்பெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி தோற்றது.

சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை பில் பொடென் பெற்றதோடு, வில்லா சார்பாக ஜோன் டுரன், மோர்கன் றோஜர்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

# நாப்போலி செல்லும் மக்குவாயா?





இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் பின்களவீரரான ஹரி மக்குவாவாயாவைக் கைச்சாத்திட இத்தாலிய சீரி ஏ கழகமான நாப்போலி ஆர்வம் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுனைட்டெட்டுடனான 31 வயதான மக்குவாயாவின் ஒப்பந்தமானது நடப்புப் பருவகாலத்துடன் முடிவடைகின்ற நிலையில், துருக்கியக் கழகமான கலட்டசரியும் மக்குவாயாவைக் கைச்சாத்திட ஆர்வம் காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

டைஸன் பியூரிக்கெதிராக

# அதிபாரப் பட்டங்களை தக்க வைத்த உசிக்

சவூதி அரேபியாவில் ஞாயிற்றுக்கிழமை (22) நடைபெற்ற பிரித்தானியாவின் டைஸன் பியூரிக்கெதிரான சண்டையில் ஏகமனதான தீர்மானத்தின்படி தனது உலக அதிபாரப் பட்டங்களை உக்ரேனின் ஒலெக்ஸான்டர் உசிக் தக்க வைத்து தொடர்ந்தும் தோல்வியடையாதவராகக் காணப்படுகின்றார்.

36 வயதான பியூரியை விட உயரம், நிறையில் குறைவாக இருந்தபோதும் 116-112 என்ற புள்ளிகள் கணக்கில் மூன்று நடுவர்களின் புள்ளிகளையும் பெற்று 37 வயதான உசிக் வென்றிருந்தார்.

அந்தவகையில், இதுவரையில் பங்கேற்றிருந்த 23 போட்டிகளிலும் உசிக் தோல்வியடையவில்லை.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 23 டிசெம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.